தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்



## வையப்பமலை கவிதாஸ் கல்லூரியில்

# முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா



நாமக்கல், ஜூலை.4-

திருச்செங்கோடு வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரியின் தாளாளர் செந்தில்குமார் தலைமை தாங்கி பேசினார். கல்லூரியின் தலைவர் பழனியப்பன், துணை தலைவர் சரஸ்வதி, செயலாளர் கவிதா செந்தில்குமார், முதல்வர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த்துறை உதவி பேராசிரியர் ஜெயந்தி வரவேற்றார். இந்நிகழ்வில் மாணவர்கள் கல்வி பயிலும் போது பேராசிரியர்களின் அறிவுரைகளை கவனமாக பின்பற்ற வேண்டும் என்றும், மாணவ-மாணவிக்ள் தமது பெற்றோரை முன்னோடியாக ஏற்றுக்கொண்டு கடினமாக உழைத்து வெற்றி வெற்ற வேண்டும் என்றும், கல்வி இன்றியமையாதது, விடா முயற்சியையும் உழைப்பையும் அனைத்து செயல்களிலும் என்றும் கடைப்பிடிக்க வேண்டும் என்று மாணவர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது. முடிவில் தாவரவியல் துறை தலைவர் உதய்சங்கர் நன்றி கூறினார். நிகழ்ச்சியை தமிழ்த் துறை உதவி பேராசிரியர் திருமலைபாண்டியன் தொகுத்து வழங்கினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்





### வையப்பமலை கவிதாஸ் கல்லூரியில்

# முதலாமாண்டு மாணவர்களுக்கு புத்தாக்க பயிற்சி

வெப்படை, ஜூலை.12-

வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கு 'வெற்றிக்கான வழி' என்னும் தலைப்பில் புத்தாக்க பயிற்சி வகுப்புகள் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். தமிழ்த் துறை உதவி பேராசிரியர் பெரியசாமி வரவேற்றார்.

கல்லூரி தலைவர் பழனியப்பன், துணை தலைவர் சரஸ்வதி, செயலாளர் கவிதா செந்தில்குமார், முதல்வர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறை இயக்குனர் குமரேசன் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர், மாணவ, மாணவிகள் அறிவு, ஒழுக்கம், தனித்திறமை போன்றவற்றை மேம்படுத்தி தம்முடைய தனித்திறமைகளை வளர்த்து வாழ்வில் சிறந்து விளங்கி நல்ல குடிமக்களாக திகழ வேண்டும் என்றார்.

முடிவில் விலங்கியல் துறை தலைவர் பிரேம்தாஸ் நன்றி கூறினார். நிகழச்சியை தமிழ்த்துறை உதவி பேராசிரியை ஜெயந்தி தொகுத்து வழங்கினார்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்



## கவிதாஸ் கலை, அறிவியல் கல்லூரியில்

# உலக எய்ட்ஸ் தின உறுதிமொழி ஏற்பு




வெப்படை, டிச.3-

நாமக்கல் மாவட்டம் வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தமிழ்நாடு எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு, பெரியார் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நடத்தின. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் தாளாளர் செந்தில் குமார் தலைமை தாங்கி பேசுகையில், எச்.ஐ.வி. தடுப்பு மற்றும் பராமரிப்பு குறித்து முழுமையான தகவலை தெரிந்து கொண்டு அவர்தம் வாழ்வில் கடைபிடித்தால், நமது சிறந்த தலைமைப் பண்புகளால் புதிய எச்.ஐ.வி. தொற்று ஏற்படாமல் தடுக்கலாம் என்றார். கல்லூரியின் முதல்வர் விஜய்குமார் பேசுகையில், எய்ட்ஸ் நோய் இல்லாத சமுதாயம் உருவாக மாணவர்களின் பங்கு மிகவும் அவசியமாகிறது. எச்.ஐ.வி தொற்று இல்லாத சமுதாயத்தை உருவாக்கும் விழிப்புணர்வுக்கு மாணவர்கள் பங்காற்ற வேண்டும் என்றார். இதனை தொடர்ந்து கல்லூரியின் செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர் மகேந்திரன் உலக எய்ட்ஸ் தின உறுதிமொழியினை வாசிக்க மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் உள்பட பலர் ஏற்றுக் கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்



வையப்பமலை

# கவிதாஸ் கல்லூரியில் வாக்காளர் சேர்க்கை விழிப்புணர்வு முகாம்




வெப்படை, டிச.18-

திருச்செங்கோடு வையப்பமலை கவிதாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வாக்காளர் சேர்க்கை விழிப்புணர்வு முகாம் நேற்று நடந்தது. கல்லூரி தாளாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். முதல்வர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். இந்த முகாமில், திருச்செங்கோடு உதவி கலெக்டர் லெனின் கலந்து கொண்டு பேசுகையில், முதல் முறையாக வாக்களிக்கும் வாக்காளர் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகரித்து உள்ளது. வாக்குரிமை என்பது நாட்டின் வளர்ச்சிக்கும், அரசாங்கத்தின் சிறந்த தன்மைக்கும் இன்றியமையாதது, என்று கூறினார். இதனை தொடர்ந்து திருச்செங்கோடு தாசில்தார் கிருஷ்ணவேணி, மாணவர்களுக்கு வாக்காளர் சேர்க்கை படிவங்களை வழங்கி பூர்த்தி செய்வது குறித்து விளக்கினார். துணை தாசில்தார் ரவி உள்பட வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு வாக்காளர்களின் உரிமைகள் மற்றும் அவற்றிற்கு உரிய சட்டங்கள் பற்றி விளக்கினர். தொடர்ந்து மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்காளர் படிவங்களை அதிகாரிகள் பூர்த்தி செய்து திரும்ப பெற்றுக்கொண்டனர்.